வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி 19.08.2025 நேரம் மாலை 6.10 மணி

---

__தலைப்புச் செய்திகள்__

- தூதரக அதிகாரிகளின் செயல்பாடுகள், நாட்டின் உள்நாட்டுத் தேவைகளுக்கும், வளர்ச்சி இலக்குகளுக்கும் ஏற்றதாக அமைய வேண்டும் என, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, NDA நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில், குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான கூட்டணி வேட்பாளர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை அறிமுகப்படுத்தினார்.
- குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான இண்டியா கூட்டணி வேட்பாளராக, முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி திரு. சுதர்சன் ரெட்டி அறிவிக்கப் பட்டுள்ளார்.
- பசுமை ஹைட்ரஜன் ஏற்றுமதிக்கான உலகக் கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்தும் நோக்குடன், அரசு செயல்பட்டு வருவதாக, மத்திய இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் யெஸ்ஸோ நாயக் கூறியுள்ளார்.

------------------------

__முர்மு__

இந்திய வெளியுறவுப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியில் உள்ள அதிகாரிகள் இன்று, புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்தனர். 2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக மேம்படும் இலக்கிற்கும், நாட்டின் உள்நாட்டுத் தேவைகளுக்கும் ஏற்றதாக, ராஜீயத் துறையின் செயல்பாடுகள் அமைய வேண்டும் என, குடியரசுத் தலைவர் கூறினார். அமைதி, அஹிம்சை, பேச்சு வார்த்தை உட்பட, இந்தியாவின் பாரம்பரிய

மாண்புகளை உயர்த்திப் பிடிக்கும் வகையில், வெளியுறவுப் பணி அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். தீவிரவாதம், பருவநிலை மாற்றம் உட்பட, உலகின் முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில், இந்தியாவின் பங்கு அதிகரித்து வருவதையும், ராஜீயத் துறையின் செயல்பாடுகளில் யோகா, ஆயுர்வேதம், ஸ்ரீஅன்னம் போன்ற கலாச்சார அம்சங்கள் முக்கியத்துவம் பெற்ற வருவதையும். அவர் சுட்டிக் காட்டினார்.

-----------------------

<u>மோடி கட்டுரை</u>

உலகிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியாவை தொடர்ந்து பராமரிக்க, அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு முயற்சிகள் குறித்து, பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், முக்கிய கனிமங்கள் தொடர்பான தேசிய திட்டம், தேசிய ஆழ்கடல் ஆராய்ச்சித் திட்டம் போன்ற அரசின் திட்டங்கள், முக்கிய பங்களிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். அரசின் பல்வேறு திட்டங்கள், மற்றும் சீர்திருத்தங்கள் காரணமாக, இந்தியாவின் உள்நாட்டு ஹைட்ரோ கார்பன் உற்பத்தி, 2032ஆம் ஆண்டிற்குள், 85 மில்லியன் டன்னாக அதிகரிக்கும் என்று, அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி, தமது கட்டுரையில் கூறியுள்ளார்.

-----------------------

<u>ராதாகிருஷ்ணன்</u>

பிரதமர் திரு. நரேந்தீர மோடி இன்று புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில், குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான கூட்டணி வேட்பாளர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை அறிமுகப்படுத்தி, அவரை பாராட்டினார். சர்ச்சை

ஏதுமின்றி, எளிய முறையில் வாழ்பவர் சி.பி. ராதாகிருஷ்ணன் என்றும், குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப் படுவது, நாட்டிற்கே மகிழ்ச்சிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறினார். எதிர்கட்சி எம்.பிக்கள் உட்பட, அனைத்து எம்.பிக்களும் இணைந்து, திரு. ராதாகிருஷ்ணனை போட்டியின்றி தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், பிரதமர் இக்கூட்டத்தில் கேட்டுக் கொண்டதாக, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

------------------------

<u>*துணை ஜனாதிபதி-காங்கிரஸ்*</u>

குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான இண்டியா கூட்டணி வேட்பாளராக, முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி திரு. சுதர்சன் ரெட்டி அறிவிக்கப் பட்டுள்ளார். காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜூன கார்கே, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார். குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல், கொள்கைகளுக்கு இடையிலான போர் என்பதை, அனைத்து எதிர்கட்சிகளும் ஒப்புக் கொள்வதாகவும், போட்டியில் தாங்கள் இறங்குவதற்கு இதுவே காரணம் என்றும் அவர் கூறினார். திரு. சுதர்சன் ரெட்டி, வரும் 21ஆம் தேதி, தமது வேட்பு மனுவை தாக்கல் செய்வார் என்றும், திரு. கார்கே தெரிவித்தார்.

------------------------

<u>*நாடாளுமன்றம் 1*</u>

பீகார் வாக்காளர் பட்டியல் விவகாரம் குறித்து, இன்று நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, இரு அவைகளும் மீண்டும், மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டன.

*நாடாளுமன்றம் 2*

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, இன்று மாநிலங்களவை, முதலில் பிற்பகல் 2 மணி வரையிலும், பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது. மக்களைவையில் அலுவல்கள், முதலில் 3 முறையும், மாலை 4 மணிக்கு மேல், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா குறித்த சிறப்பு விவாதம் இன்று அவையில், மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும், அமளியால் விவாதங்கள் பாதிக்கப்பட்டன. முன்னதாக, மக்களவை இன்று காலை கூடியபோது, அவையில், காஷ்மீரி, சந்தாலி, மற்றும் கொங்கணி மொழி பெயர்ப்பு வசதிகள் சேர்க்கப் பட்டுள்ளதாக, சபாநாயகர் திரு. ஓம். பிர்லா தெரிவித்தார். இதையும் சேர்த்து, அனைத்து 22 அரசியல் சாசன மொழிகளிலும் மொழி பெயர்ப்பு வசதிகள், தற்போது வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

------------------------

*அமைச்சரவை*

ராஜஸ்தான் மாநிலம், கோட்டா-பூந்தி பகுதியில், ஆயிரத்து 507 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில், புதிய விமான நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ராஜஸ்தானின், தொழில், மற்றும், கல்விக் கேந்திரமாகத் திகழும் கோட்டா பகுதியில், உள்கட்டமைப்பு வசதிகளை மேலும் வலுப்படுத்துவதாக இத்திட்டம் அமைகிறது. ஒடிசா தலைநகர் புவனேஸ்வரைச் சுற்றி, 8 ஆயிரத்து 307 கோடி ரூபாய் செலவில், 6 தடப் புறவழிச் சாலை அமைக்கும் திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக, தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். வர்த்தக ரீதியிலான கனரக வாகனங்கள், கட்டாக், மற்றும், புவனேஷ்வர் நகரங்களை தவிர்த்துவிட்டுப் பயணிக்க, இதனால் ஏதுவாகும் என்று அவர் கூறினார். இத்திட்டத்தினால், சுமார் 74 லட்சம் மனித நாட்கள் அளவிற்கு நேரடி

வேலை வாய்ப்புகளும், 93 லட்சம் மனித நாட்கள் அளவிற்கு, மறைமுக வேலை வாய்ப்புகளும் உருவாகும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

------------------------

*பசுமை ஹைட்ரஜன் 1*

பசுமை ஹைட்ரஜன் ஏற்றுமதிக்கான உலகக் கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்தி, உலகத் தேவையின் 10 சத விகிதத்தைப் பிடிக்கும் இலக்குடன், அரசு செயல்பட்டு வருவதாக, புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் யெஸ்ஸோ நாயக் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், ஃபிக்கி பசுமை எரிபொருள் உச்சி மாநாட்டின் தொடக்க விழா அமர்வில் அவர் உரையாற்றினார்.

*பசுமை ஹைட்ரஜன் 2*

(வாய்ஸ்)

2030ஆம் ஆண்டிற்குள் நாட்டின் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, 5 மில்லியன் டன்னாகவும், பசுமை ஹைட்ரஜன் மூலமான மின்சார உற்பத்தித் திறன், 125 கிகா வாட்டாகவும் அதிகரிக்கும் என அமைச்சர் யெஸ்ஸோ நாயக் தெரிவித்தார். பசுமை ஹைட்ரஜன் பரிசோதனை வசதிகளை, உள்நாட்டிலேயே நிறுவ, அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இத்தகைய 3 திட்டங்களுக்கு ஏற்கனவே அனுமதி அளிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். பசுமை ஹைட்ரஜனின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த, அரசு பல்வேறு விதிமுறைகளை உருவாக்கி வருவதாக அமைச்சர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின் போது, நாட்டின் பசுமை ஹைட்ரஜன் சூழல் குறித்த அறிக்கை ஒன்றையும் அவர் வெளியிட்டார்.

------------------------

**விண்வெளி தினம்**

வரும் 23ஆம் தேதி தேசிய விண்வெளி தினம் கொண்டாடப் படுவதை முன்னிட்டு, திருவனந்தபுரம் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில், இன்று நடைபெற்ற திறந்த நிலை நிகழ்ச்சியில், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள், மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு, ஆர்.ஹெச்-200 என்னும் சிறிய சிறப்பு ராக்கெட் விண்ணில் ஏவப்படுவதை பார்வையிட்டனர். இந்த சிறப்பு ராக்கெட், கடல் மட்டத்தில் இருந்து 65 கிலோ மீட்டர் வரையிலான தனது பயணத்தின் போது, காற்றின் திசைக்கு ஏற்பப் பறக்கும் காற்றுப் பதர்களை தூவிக் கொண்டே சென்றது. இந்த காற்றுப் பதர்களை ரேடார் உதவியுடன் கண்காணிப்பதன் மூலம், காற்றின் திசை, வேகம், மற்றும், வானிலை மாற்றங்களை கணிக்க ஏதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

**மூப்பனார்-புதுச்சேரி**

மக்கள் தலைவர் ஜி.கே. மூப்பனார் பிறந்த நாள் இன்று புதுச்சேரியில், அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. மரப்பாலம் சந்திப்பில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமிநாராயணன், அரசுக் கொறடா திரு. ஏ.கே.டி. ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு. லட்சுமிகாந்தன் ஆகியோர், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

------------------------

**உழவர் பயிற்சி**

நெல் பயிருக்கான சான்றிதழ் செயல்முறை, மற்றும் விதை உற்பத்தி தொழில்நுட்பம் குறித்து, புதுச்சேரி அரசின் வேளாண் துறையும், விதை சான்றளிப்பு முகமையும் இணைந்து, இன்று வில்லியனூரில் நடத்திய ஒருநாள் பயிற்சி முகாமில், வில்லியனூர், அரியூர், ஒதியம்பட்டு, கூடப்பாக்கம், மற்றும் இதர பகுதிகளைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். காரைக்கால் பண்டித

ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் ராமநாதன், விதை உற்பத்தித் தொழில்நுட்பம் குறித்தும், தமிழ்நாடு விதை சான்றிளிப்பு அதிகாரி திரு. கனகராஜ், நெல் பயிருக்கான செயல்முறை குறித்தும் விளக்கம் அளித்தனர்.

------------------------

<u>வானிலை</u>

நேற்று மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலவிய காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், இன்று அதிகாலை, கோபால்பூர் அருகே, ஒடிசா கரையை கடந்தது. இது மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து, அடுத்த 12 மணி நேரத்தில், படிப்படியாக வலுவிழக்கும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, தென்னிந்தியப் பகுதிகளின் மேல், தற்போது வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன்காரணமாக,வரும் 25ஆம் தேதி வரை தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரி- காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்கக்கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில், 9 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------

<u>மேட்டூர்</u>

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணையின் நீர்வரத்து, இன்று, வினாடிக்கு 87 ஆயிரத்து 805 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 50 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றப் படுகிறது. அணையின் நீர்மட்டம், 117.45 அடியாக உள்ளது. இதற்கிடையே, ஈரோடு மாவட்டம் பவானி

சாகர் அணையில் இருந்து, வினாடிக்கு 7 ஆயிரத்து 400 கனஅடி உபரி நீர் வெளியேற்றப் படுவதால், கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு, மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது.

------------------------

<u>*விக்சித் க்ரிஷி*</u>

விவசாயிகளுக்கான விக்சித் க்ரிஷி சங்கல்ப இயக்கம், வரும் அக்டோபர் 3 முதல், 18ஆம் தேதி வரை, நாடு முழுவதும் நடைபெறும் என, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான் அறிவித்துள்ளார். இந்த இயக்கத்தின் போது, ஆயிரக்கணக்கிலான விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் துறை அதிகாரிகள், கிராமந்தோறும் விவசாயிகளை சந்தித்து, புதிய சாகுபடி தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறுவார்கள் என்று, அவர் இன்று மக்களவையில், துணைக் கேள்விகளுக்கு பதில் அளிக்கையில் கூறினார். இவ்வாண்டு மே மாதம் நடைபெற்ற, விக்சித் க்ரிஷி சங்கல்ப இயக்கத்தின் போது, நாடு முழுவதும் 1 கோடியே 33 லட்சம் விவசாயிகளை அரசு இவ்வாறு தொடர்பு கொண்டதாக, அவர் மேலும் கூறினார்.

------------------------

<u>*ஸ்டாலின்*</u>

முன்னாள் படை வீரர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான, தமிழக அரசின் காக்கும் கரங்கள் திட்டத்தை, முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் இன்று தொடக்கி வைத்தார். சென்னை தலைமை செயலத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, தமிழகத்தில் தொழல் தொடங்குவதற்கான ஆணைகளையும் அவர் வழங்கினார். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக, நெடுஞ்சாலை உள்ளிட்ட துறைகளில் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 214 பேருக்கும், கருணை அடிப்படையில் 33 பேருக்கும், பணி நியமன ஆணைகளை, தமிழக முதலமைச்சர் வழங்கினார்.